சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ந் தேதி

உ
சிவமயம்

செய்தித்தாளாகப்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை: சதம் 40

புத் 93] யாழ்ப்பாணம்:- துந்துபி ஞு, ஆனிமீ 25-6-82, 2, 9,-7-82 வெள்ளிக்கிழமை [இல-3

வரலாற்று வனப்பும் வளமும் மிகு

# மாவையிற் கந்தசுவாமி கோயில் மகா விழாக் காட்சி

## வளர்பிறை ஆனிச் சட்டித் திதியில் மகத்தான கொடி ஏற்றம்!

"முருகா முருகா" என்று முப்பொழுதும் கந்தனைக் கும்பிடும் பல்லாயிரம் பத்தர்கள் ஆண்டுக்காண்டு ஆவலுடன் எதிர்பார்க்கும் மாவைக் கந்தன் கோயில் மகா விழாக் காலம் சென்ற சனிக்கிழமை (26-6-1982) ஆரம்பமானது.

அன்று அடியார்களின் அர்ச்சனை எழுச்சியின் மத்தியில் நண்பகல் 12 மணிக்குச் சேவற் கொடியோன் கொடியேற்றம் பிரம்மஸ்ரீ ஐ. வைத்தியநாதக்குருக்களால் வேத சிவாகம விதிமுறை வழுவாவண்ணம் ஆனந்த மயமாக நிகழ்ந்தது. ஆதீன கர்த்தா மகாராஜஸ்ரீ ச. அ. ஷண்முகநாதக் குருக்கள் சகல நிகழ்ச்சிகளையும் நெறிப்படுத்தி வருகின்றனர்.

காலையில் நித்தியமும் 7 மணிக்கு ஆதீனகர்த்தா தலைமையில் கந்தரனுபூதித் தொடர் விளக்க உரை பண்டிதர் மா. குமாரசாமி ஆசிரியர் அவர்களால் நிகழ்த்தப்பெறுகின்றது. 7-30 மணியளவில் அகில இலங்கைச் சைவ மகா சபையினர் பெரிய புராணப் பிரசங்கங்களை நடாத்த ஆதீன கர்த்தா அவர்களின் ஆசியுடன் ஒழுங்கு செய்திருக்கின்றனர். முதல் நாள் சபைத் தலைவர் நம. சிவப்பிரகாசம் அவர்கள் சொற்பெருக்கு நிகழ்ச்சியைத் தொடக்கி வைக்க பௌராணிகர் வ. குகசர்மா அவர்களால் நமிநந்தியடிகளது சரித்திரம் எடுத்துரைக்கப் பெற்றது.

விழாக்காலம் நேரக் கிரமத்துடன் வெகு சிறப்பாகப் பெருந் திரளான அடியார்களின் பக்திப் பரவசத்துடன் ஆனந்தமாக நிகழ்ந்து வருகின்றது.



## தேவி மகோற்ஸவம்

வண்ணை வைத்தீஸ்வரன் தேவி ஸ்ரீ தையல் நாயகி அம்பாள் மஹோற்ஸவம் இம் மாதம் 31 ஆம் திகதி (15-7-82) வியாழக்கிழமை துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் சிறப்பாக நடைபெறும். 23-7-82 வெள்ளிக்கிழமை இரதோற்ஸவமும் மறுநாள் தீர்த்தோற்ஸவமும் நடைபெறும்.

## மகாகும்பாபிஷேகம்

சம்பூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளாலய மகா கும்பாபிஷேகம் வைகாசித் திங்கள் 21-ஆம் நாள் (4-6-1982) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் 12:49 மணி வரையிலுள்ள சிங்க லக்கினமும் விசாக நட்சத்திரமும் கூடிய சுபவேளையில் நடைபெற்றது.

## இலக்கியச் சந்திப்பு

கடந்த 1-7-82 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் முத்தமிழ் வெளியீட்டுக் கழக ஆதரவில் நடைபெற்ற இலக்கிய நண்பர்கள் கூட்டத்தில் ஈழத் தமிழ் எழுத்தாளரும் இந்திய அடையாறு உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் திரு. க. த. திருநாவுக்கரசவும் கலந்து கொண்ட கலந்துரையாடல் நடைபெற்றது. கவிஞர் சொக்கனின் 'கெடுபா - 3' நூல் அறிமுகமும் விழாவில் இடம் பெற்றது.

பதவிப் புகழைப்

## பாராட்டுகின்றோம்

### சபைத் தலைவர்
### மாநகர சபை உறுப்பினர் ஆனார்

சைவ பரிபாலன சபைத் தலைவர்கள், நிருவாக உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள் அரசியலிலும் உரிய பங்கெடுத்து ஊர் உபகாரிகளானார்கள் என்பதை யாவரும் அறிவர். வள்ளல் பொன். இராமநாதன், திரு பொ. குமாரசாமி வீரர் அம்பலவாணர் கனகசபை, வீரர் வைத்தியலிங்கம் துரைசுவாமி, திரு அ. கனகரத்தினம், திரு. சு. இராசரத்தினம் திரு. அ. சபாபதி ஆகியோர் சட்ட நிரூபண, அரச சபைகளில் அங்கத்துவம் வகித்து அரிய புகழை நாட்டியிருந்தனர்.

அவ்வாறே யாழ் மாநகர சபையிலும் திரு இ. சிவகுருநாதர், திரு. க. ஐயாத்துரை, திரு. திரு செ. மன்மதராயன் முதலியார் முத்துத்தம்பி ஆகியோர் உறுப்பினராகி உழைத்துப் பெயரீட்டினர்.

இப்பொழுது எங்கள் சபைத் தலைவர் திரு. ச. செல்வராசா, சட்டத்தரணி, அவர்கள் யாழ் மாநகர சபை உறுப்பினராகி இப்பேருக்குப் பெரும்பணியாற்றும் வாய்ப்பினைப்பெற்றிருக்கின்றனர். சமயத் தொண்டும் சமூகத் தொண்டும் நல்ல நெறியில் ஆற்றும் வல்லமை படைத்த திரு. செல்வராசா அவர்களுக்குச் சைவபரிபாலன சபை அங்கத்தவர்களும், இந்துசாதன ஆங்கில தமிழ் இதழ் அபிமானிகளும் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டுகின்றனர்.

இந்துக் கல்லூரியை நிறுவி இயங்கிய

## சைவ பரிபாலன சபையின் தகைசால் தொண்டு

### பணச்சடங்குவைத்துச் சைவமக்களைப் பங்குகொள்ள வைத்த நவமான நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்றால் இலங்கையிலே கல்விச் சால்புக்கணிப்பில் முன் வரிசையில் உள்ள மகா வித்தியாலயம் என்பதை யாவரும் அறிவர்.

இத்தகைய உத்தம நிலையத்தினை உருவாக்கியவர்கள் யார், அவ் வழியில் எவ்வாறு உழைத்தனர், என்ன பயன் பெற்றனர் என்றெல்லாம் மக்கள் அறிய வேண்டியதத்தியாவசியம். சைவ பரிபாலன சபையின் வரலாறு இந் நாட்டின் ஆத்மிக ஞான வளர்ச்சியின் விபரமாகும். புற நாட்டவர்கள் தம மதங்களைப்பற்றியும் அம் மதத் தாபனங்களைப்பற்றியும் விரிவான விபர நூல்கள் வெளியிட்டு மகிழ்வர். அவ்வாறு சைவமக்கள் நாணத்திலுற் போலும் செய்யாது இருக்கின்றனர், எனினும் இந்துசாதன மலர்களில் இவ் வரலாறு வெளிவந்திருக்கின்றன. பூரணமான பொழிப்பு நூல் ஒன்று வேண்டும். இதற்கு முகவுரையாக அகில உலக இந்து மகாநாட்டு 'ஆத்ம ஜோதிச் சிறப்பு மலரில் எங்கள் ஆசிரியர் கட்டுரை ஒன்று வரைந்திருக்கின்றார். இதனை முன்முகமாகக் கொண்டு வரலாறு விரைவில் எழுதப்பட்டு வெளிவரும் என்று நூற்றாண்டு விழாவை எதிர்பார்க்கும் இந்து சாதன நேயர்கள் அறிவார்களாக. (இந்தப் பணியில் எம்மை இயங்க வைத்திருக்கும் ஏது 'ஈழ நாட்டில்' திரு. ச. அம்பிகைபாகன் அவர்கள் மறு பிரசுரமாக வெளியிட்ட பணச்சடங்கு விஞ்ஞாபனமே).

கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுல

## இந்துப் போதகர் பயிற்சி

### ஓராண்டு நிறைவு விழா

கடந்த ஜூன் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் இவ்விழா கிளிநொச்சிக் குருகுலத்தில் கோலாகலமாக நடைபெற்றது. அ. இ. இந்து மாமன்றத் தலைவரும் இளைப்பாறிய நீதிபதியுமாகிய வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் விசேட விருந்தினர்களாக இலங்கையிலுள்ள சைவபரிபாலன சபை, திவ்விய ஜீவன சங்கம், சின்

(வளர்ச்சி 8 ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

துந்துபி ஞூ ஆனி மீ
25-6-82 2, 9-7-82 வெள்ளி

# சைவமாஞ் சமயஞ் சாரில்!

இன்று வரைக்கும் வெளிவந்த சமய இலக்கிய ஆராய்ச்சி உரைகளில் எல்லாம் சைவ சித்தாந்தம் தனித்துவமும் மிகுசிறப்பும் உடைய கிடைத்தற்கரியதோர் மார்க்கம் என்று பேசப்பட்டிருக்கின்றது. முடிந்த முடிவுபோலப் புறமதப் போதகர்களும் பேரறிஞர்களும் பல்கலைக் கழக தத்துவத்துறை ஆராய்ச்சியாளர்களும் சைவமாஞ் சமயம் தெய்வீகச் சீரிற் சிறந்து விளங்குகின்றதென்று தெளிவாக உறுதியாகச் சொல்லிப் போந்தனர். ஓர் அளவில் இத்துறையில் இனிமேல் ஆராய்ச்சியே இருக்க வொண்ணாதென்று கூறினும் அமையும்.

பாரிய உலகையியலிற் பரந்த முன்னணியில் அனைத்துலகுக்கும் உலோகாயுதப் போக்கில பொருண்மை வளப்பிற் பெருகும அமெரிக்க நாட்டிற் பிறந்து பெற்றோர் தம் மத வழி நின்ற ஒருவர் இப்பொழுது சீலராய் மெய்ப் பொருளை விளக்கும் மேதாவியாக யாத்திரை செய்து வருகின்றார் என்றால் இத்தவஞானியின் கூற்றுகள் எவ்வளவு அரிதானவை என்பதை அவற்றைப் படித்து அறிந்தவர்களே அறிவர். தன்மைக்குத் தனி இடம் வகிக்கும் பசுபிக் மகாசமுத்திரத்தின நாப் பண்ணுக்காவாய்த் தீவுகள் (அவை பன்னூற்றுக் கணக்கானவை) கித்திலக் கோவை போலத் திகழ்கின்றன. ஆங்கே சைவத் தேவாலயமும் ஆச்சிரமமும் மிளிர்கின்றனவெனின் அற்புதமன்றோ? மிகு சைவத் துறை விளங்கும் காவாய் ஆதின கர்ந்தாவாக சிவாய சுப்பிரமுன்ய சுவாமிகள் எங்கள் நாட்டின் தவப்பேறன யோகர் சுவாமிகளின் குரு உபதேசத்தை மந்திரமாகக் கொண்டு சைவநெறிபேணி வளர்க்கின்றார். இவர்களின் சிவப் பணியை எடுத்துப் பாரத நாட்டு ஆதீனங்கள், இலங்கைச் சிவாலய கர்த்தாக்கள் அரிது அரிது எனப் பெரிதாகப் பாராட்டுகின்றனர். இந்நெறியை எங்கள் நாட்டில் இலக்க வட்டால் அளவையம்பதியில் ஓர் ஆச்சிரமம் அமைத்துள்ளனர்.

இத்தகைய தத்துவஞானி எல்லாவற்றிலும் மேலாக ஒன்றை எடுத்து அடிக்கடி இடித்துரைத்துரைத்து வருகின்றனர். 'சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ் பெறல் அரிது' அரிதாக அவ்வழிசார்ந்தவர்கள் பின் வேறுவழிகளைப்பற்றி எள்ளளவும் நினைக்கவேண்டிய ஏது இருக்குமா? இல்லை. பல்கலைக்கழகக் கலைமாணி பாலர் வகுப்புப் பாடங்களைப் படிக்க முன் வருவது போலல்லவா ஏனைய மதங்களை வேறுபோதனைகளைப் பற்றிச் சிந்திக்கவும் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் ஆன வீண்முயற்சி இருக்கும். மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை. மேலொரு தத்துவம் இல்லாதது சைவ சித்தாந்தம். சர்வ தத்துவங்களுக்கும் அப்பாலாய தனித் தத்துவம். பூரணமான மார்க்கம்.

இவ்வாறு நிறைந்தநெறியில் நிற்பவர்கள் அதிற் குறைந்த மூறைகளைப்பற்றி ஏனோ நினைக்கின்றார்கள்? என்று சிவாய சுப்பிரமுன்ய சுவாமிகள் கேள்வி கடாவுகின்றனர். எங்கள் சமயம் சைவம் என்று சொல்லுங்கள். வேறெச் சொற்றொடரும் கூறவேண்டியதில்லையே என்று இரங்குகின்றார்.

குண திசையிலேதான் குரவர்கள் தோன்றுவார்கள் என்பது குவலயத்திற் பரவும் பழமொழி. கிழக்கில் ஞான சூரியன் உதிப்பதுபோற் துளக்கற்ற தூய பெரியோர்கள் காலத்துக்குக் காலம் மக்கள் மத்தியிற் குருவாக அமைந்தார்கள் என்பது உண்மை. இன்றோ குட திசைக்கும் இத்தகைய பண்பு தோன்றிவிட்டது. மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி மேதாவியாளும் தகைமை வாய்ந்தவர் யாத்திரைசெய்தார். அதன் பயனாக அந்நாட்களில் யோகப் பிழம்பாக ஒளி வீசிக்கொண்டிருந்த கொழும்புத்துறை ஞானக்கோனின் தரிசனமும் பரிச பார்வையும் கிடைக்கப்பெற்றார். சைவமாஞ் சமயஞ் சார்ந்தார், சுத்தமானார், தூய நெறி துலங்கினார். அதனை அவனிக்குத் துலங்க வைக்கும் தொண்டனாகத் திகழ்ந்து வருகின்றார்.

மேற்றிசை மேதாவியாம் இத் தபோதனரின் உபதேசங்கள் ஆங்கில மொழியில் அழகாய் அணியாய் அமைந்த பிரசுரங்களாகி வெளிவருகின்றன.

அகில உலக இந்துமா நாடு இந்த மேற்றிசைச் சைவ வித்தகரின் பொன்மொழிகளை நூல்வடிவமாக வெளியிட்டிருக்கின்றனர். சைவமாம் சமயஞ் சார்ந்தவர்கள் நாங்கள் என்று சொல்லும் யாவரும் இந்நூலைப்படித்துப்பாருங்கள், இதயங்களில் உங்கள் உள்ளே என்ன எடுத்து இயம்பும் என்பதை அனுபவித்து ஏனையோருக்கும் அறிய வையுங்கள் —

இது ஒரு சமயப் பணி!

## எண்பான் மூன்றேடியாண்டினும் பலவாகும்

"இறை - ஒளி"

பண்டித மாமணிஇப் பாரிற் பலகலைநுண்
கண்டித மாஞ்சைவங் காக்கின்ற — தொண்டினில்
எண்பான்மூன் றேடியாண் டின்னும் பலவாகும்
பண்பீசன் ஈவான் பரிந்து.

## கிளிநொச்சி ஆதாரக் கல்வி

(1-ஆம் பக்கத்து வளர்ச்சி)

னந்த குருகுலம் அ. இ. இந்து மாமன்றம், அகில உலக இந்து பரிஷத் முதலிய இந்து நிறுவனங்களின் பிரமுகர்களும், இந்து சமயத் திணைக்கள, பல்கலைக் கழக யாழ் வளாகக் கல்விமான்களும், சமயப் பெரியார்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்து தவதிரு வடிவேற்சுவாமிகள், பருத்தித்துறை இலங்கைக் கிளை ஸ்ரீலஸ்ரீ மெய்கண்டாராதீன ஞானப்பிரகாசத் தம்பிரான சுவாமிகள் செல்வியடி பரமானந்தாச்சிரமம் தவத்திரு பரமானந்தசுவாமிகள், மட்டக்களப்பு தெய்வ நெறிக் கழகம் தவத்திரு ஓங்காரானந்தசுவாமிகள் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மடம் தவத்திரு ஜீவானந்தசுவாமிகள் ஈழத்தின் தமிழ் சைவப் பேரறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

இக் குருகுலமும் இகன்மூலம் பயிற்சி பெற்று வெளியேறும் இந்துப் போதகர்களும் சிறந்தமுறையில் ஈழத்தில் மட்டுமன்றிப் பிற சைவ நிலங்களுக்கும் தமது நினைத்த நீண்ட சேவையை வெற்றிகரமாக வழங்குவதற்கு ஏற்ற திட்டத்தை அமைப்பதற்கான கருத்தரங்குகளை, சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் ஒன்றுகூடி நடாத்தினர்.

இந்துப் போதகர்கள் தமிழ் ஆங்கிலம் சிங்களம் சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளிலும் பேச எழுத வல்லவர்களாகத் திட்டமிட்டபடி பயிற்றப்பட்டதன் விளைவாக விழாவில் நான்கு மொழிகளிலும் இந்துப் போதகர்களால் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. கிளிநொச்சி பஸ்நிலையத்திலிருந்து குருகுலத்துக்கு வெளியிடங்களிலிருந்து வருகை தந்தவர்களுக்குக் குருகுல நிர்வாகம் சிறந்த இலவச போக்குவரத்து வசதியையும், போசன வசதிகளையும் ஏற்பாடு செய்து வைத்தமை பாராட்டப்பட வேண்டியதாகும்.

## வாழ்க மணமக்கள்

இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியரும், சைவ அறம் வளர்க்கும் சமயச் சபைகள் பலவற்றின் உயிர்நாடியாக ஓடியோடிப் பணிபுரிபவரும் சைவப்பேரறிஞரும் மல்லை நமசிவாயப் புலவரின் புலமைசான்ற மைந்தருமாகிய வழக்கறிஞர், சைவ பூஷணம் நம. சிவப்பிரகாசம் அவர்களின் ஏக புத்திரி செல்வி கேதாரகௌரி அவர்களுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும், முன்னை நாள் மேலவை உறுப்பினரும். யாழ். மாவட்ட சபைத் தலைவருமான வழக்கறிஞர் சு. நடராசா அவர்களின் சிரேஷ்ட புதல்வன், பொறியியலாளர் செல்வன் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் அண்மையில் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெற்றது, சைவத் தமிழறிஞர்கள், அரசியல் அறிஞர்கள், வழக்கறிஞர்கள் திருமணத்திற் சமுகமாயிருந்து மணமக்களை ஆசீர்வதித்து மகிழ்ந்தனர்

இம் மணமக்களை சைவமும் தமிழும்போல ஒருவர்க்கொருவர் இன்னுயிராய் விளங்கிச் சிரஞ்சீவிகளாய் வாழவேண்டுமென "இந்துசாதனம்" வாழ்த்துகிறது.

## சத்து - சித்து - ஆனந்தம்

சித்தாந்த நல்லறிஞர், கலாநிதி, சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
சமயப்பிரசாரகர் நல்லை ஆதீனம்

பரம் பொருளாகிய சிவபெருமானது பேரருட் குணங்கள் எட்டினுள், முதற்கண்வைத்துப் போற்றப் பெறுவன மூன்று குணங்கள். அவை தோற்றக்கேடின்மை. பேரறிவுடைமை, வரம்பலின்பமுடைமை என்பனவாகும். சிவபெருமான் ஒருவனையல்லாத மற்ற உயிர்த்தொகுதிகளெல்லாம் தோற்றக்கேடுகளை உடையனவாய்ச் சிற்றறிவுடையனவாய் வரம்புபட்ட இன்பத்துடன் துன்பத்தையும் உடையனவாய் உழன்று கொண்டிருப்பனவாகும்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி" என்றும் "மெஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்" என்றும் "அறிவாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பம்" என்றும் திருவாசகம் சிவபெருமானைத் துதிக்கிறது. எப்பொழுதும் நிலையாயிருக்கிற பொருள், எந்த வேளையிலும் அதிலிருந்து தோன்ற மாட்டாது. அங்ஙனம் தோன்றுமையே. அதன் அழியாமைக்குக் காரணமாயிருக்கும். தோன்றுவதனைத்தும் அழிந்தே தீருமென்பதை, "தோற்றம உண்டேல் மரணம் உண்டு" என்ற சுந்தரமூர்த்திகள் திருவாக்கு உணர்த்துகின்றது.

எந்தப்பொருள் பிறிதொரு பொருளால் தோற்றுவிக்கப் பெறுமல் என்றும் நிலையாயிருக்கின்றதோ; அந்தப் பொருளே அனைத்துப் பொருள்களையும் தோற்றுவிப்பதாகவும், தோன்றிய அவற்றை உரியகால எல்லைவரை நிலைநிறுத்துவதாகவும் பின்னர் ஒடுக்குவதாகவும் இருக்கு", இதனையே சிவஞானபோத முதற்சூத்திரம்". ஒடுங்கி உளதாம்,, என்று கூறிச், சிவபெருமானை "ஒடுங்கி" என்ற வினையாலணையும் பெயராற் குறித்துச், "சங்கார காரணனாகிய முதலே முதல்" என்று தெளிவுபடுத்தி வலியுறுத்தியது.

திருவெம்பாவையின் இறுதித் திருப்பாடலில் "போற்றியெல்லா உயிர்க்கும் தோற்ற மாம் பொற்பாதம். போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல். போற்றி எல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்" என்று மணிவாசகப் பெருந்தகையார் அருளிச் செய்து, ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் சோதியின் அடிமலர்களே, திருமால்பிரமனாகிய அனைத்துயிர்களின் தோற்றநிலை இறுதிகளைச்செய்து கொண்டிருக்கின்றன என்பதை விளங்க வைத்தருளினார். சிவபுராணத்தில்,, ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும் ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்" என்ற பகுதியும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும்.

தோற்றக் கேடுகளில்லாத சத்துப் பொருளாய் விளங்கும் சிவபெருமான், பேரறிவுப் பிழம்பாகவும் வீற்றிருந்து எல்லா உயிர்களுக்கும் நல்லருள் புரிந்து வருகின்றார். என்றும் அழியாது ஒரே படித்தாய் இலங்கிக் கொண்டிருக்கும் இறைவன், அவ்வழியாத் தன்மை ஒன்றினுல் மட்டும் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் செய்து விடமுடியாது. ஆன்மாக்களும் இறைவனோடொப்ப அழியாத்தன்மை உடையனவேயாயினும், அவற்றிற்கு முதற் படைப்புக் காலந்தொடக்கம் வந்த அழியும் பொருள்களின் அந்துவிதத் தொடர்பு முத்திக்காலம் வரை நீங்காது நின்று. தோற்ற ஒடுக்

(வளர்ச்சி 3 ம் பக்கம்)

"சிவதொண்டனின்"
சிவதொண்டர்
சிவனிடம் சென்றார்
வித்துவான்

## க. கி. நடராஜன்

நினைவே வேரூன்றியது

---

யோகர் சுவாமிகளின் உருவத்தில் எழுந்த ஒளியில் உள்ளம் உண்மைகளின் பொலியும் தலைவலிமை பெற்ற சிலர்களிற் சிறப்பு வாய்ந்தவர் வித்துவான் க.கி. நடராசா அவர்கள் "இந்துசாதனம்" என்றால் பண்டிதர் ம. வே திருஞானசம்பந்தர் என்றிருந்ததுபோலச் "சிவதொண்டன்" என்னும் பொழுது வித்துவான் நடராசனையே யாவரும் எண்ணுவர். பல்கலைக் கழகப்பட்டங்களைப் போலச்சமயநெறிப்பத்திரிகைக்கு ஆசிரியராய் வீற்றிருக்கும்பதவி மகிமைவாய்ந்ததென்பர் அறிஞர்கள். அத்தகைய வித்தகராய் விளங்கிய வித்துவான் "சிவதொண்டனுடன்' இரண்டறக் கலந்த சிவப்பேறுபெற்று விளங்கி கின்றார்.

குருவின் ஞானச்சொற்றொடர்களுக்கெல்லாம் உரிய பொருள் விரித்துச் சிவதொண்டன் திங்கள் தோறும் செந்தமிழ் பரப்பி வரும் அருந்தவம் பூண்டவர் வித்துவான் அவர்கள் பரமேசுவரக் கல்லூரியில் ஏககாலத்தில் கல்விபயிலும் வாய்ப்பு இந்துசாதன ஆசிரியருக்கு (சமசிவப்பிரகாசம்)க் கிடைத்த ஞான்று தொடக்கம் இருவரும் இறைநெறியில் இனபுற்றவர்களாய்ச் சைவ இயக்கங்களில் ஈடுபடும் சோடியாகத் திகழ்ந்துவந்தனர் அக்காலத்திற் கல்லூரியிலே திருமுறை ஓதும் வேளைகளில் இளம் நடராசனின் இனிய குரலோசையும் இயல்பாவமைந்த பண்ணிசையும் உற்றுக்கேட்போரின உள்ளத்தில் உருவேறச் செய்யும் பான்மையிலிருந்தன, அந்தப்பத்தியில்படிப்படியாகப்பன் மடங்கு நெறிப்பட்டுப் புராணபடனம் கதைவிரிவின சொற்பொழிவு ஆகியவற்றிலே தொனித்தபடி விரிந்து விளங்கியது.

"வித்துவான்" என்னும் கலைமாணிப்பட்டம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்பெற்று ஆசிரியராக விளங்கிய நடராசன் அவர்களின் பொலிவு சிவதொண்டன் ஆசிரியர் என்ற புகழில் அடங்கி நின்றது.

சொற்சுவை தொனிக்க கற்றோர் வியக்க விபாடும் புலவராய்த் திகழ்ந்த வித்துவான் அவர்கள் யோகர் சுவாமிகளைப்பற்றி ஆக்கிய செய்யுள் நூல் மூலம் தமது சைவசித்தாந்தச் செம்மையையும் செந்தமிழ்த்திறனையும் உலகுக்கறிய வைத்தனர்.

சுவாமிகளின் "நற்சிந்தனை"களை எல்லோரும் அவாவி அருமருந்தென்னப்

## சிறந்த சைவப் பணி

உலகையளாவிய பௌத்தம், கிறீஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்களின் வரிசையில் முக்கிய இடம் வகிக்கும் நமது இந்து சமயம் கீழைத்தேய நாடுகளில் பெரும் பண்பாட்டுச் செழுமையும் தொன்மைக் கீர்த்தியும் அருள் மகத்துவமும், காலத்துக்குக்காலம் தந்துள ஞானிகளையும் ஆன்மீக ஒளி விளக்குகளையும் அநுபூதிமான்களையும் உலகும் ஏதிர ஏதிர ஒப்புயர்வின்றி வழங்கிவரும் தெய்வீகமும் மிக்கு விளங்கி வருகிறது, ஆயினும் ஏனைய மதங்கள் போன்று போதகர்களையோ, காமத்துறமார்களையோ, வைப்பகளையோ அம்மதங்கள் வழங்கி மத ஒழுக்கத்துக்கு முன்மாதிரிகாட்ட முற்பட்டுவருவதுபோன்று இந்து சமயம் இதுவரை திட்டமிட்டு மத போதகர்களை உருவாக்கி வந்ததில்லை. இந்துசமயம் இந்துச் சிறார்களுக்குச் சாதாரண பாடசாலைகளில் சமய ஒழுக்கம் கட்டாயப்படுத்தப்படாத ஆசிரியர்களால்- மது வாசனையின், சுருட்டுப் புகையின் வெற்றிலை உமிழ்நீரின் மத்தியில், சமயப் பாங்கு ஊறுபட்ட சூழலில் கற்பிக்கப்பட்டு வருகிறது, ஆம்! கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால் கற்கப்பட்டு வரவில்லை — நோக்கம் நிறைவேறாத — சமய ஒழுக்கம் பயில்விக்கப்படாத வெற்று வேட்டுச் சமயக் கல்வியே இன்று இலங்கைச் சைவச் சிறார்களைப் பொறுத்த வரையில் நடைபெற்று வருகிறது, இதனால் சமயக் கல்வியின் பிரதிபலிப்பை நம் பிள்ளைகளிடம் நடைமுறையிற் காண இயலாதிருக்கின்றது. இப்பெருங் குறைபாட்டை நிவர்த்திக்கும் தலைசிறந்த சைவ - சமூகப் பணியே இவ் இந்துப் போதகர்ப் பயிற்சி என விபரமறிந்த எல்லாச் சைவ மக்களும் மகிழ்ச்சியடைகின்றன.

18 வயதிற்கும் 25 வயதுக்குமுட்பட்ட ஆண் பெண் இரு பாலார்க்கும் வயதெல்லையின்றி நைட்டிகப் பிரமச்சாரிகட்கும் உணவு உடை முதலிய தேவைகளை இலவசமாகப் பூர்த்தியாக்கி இந்து சைவ சாஸ்திரங்களில் பரிச்சயமும், அனுட்டானம், பஞ்சாட்சர செபம், சிவபூசை, யோகாசனம், சிவாலய தரிசனம், திருமுறை ஓதுதல், ஆலய பூசை, இந்துத் திருக்கூட்ட நிர்வாகம் முதலிய செயல்முறை நடைமுறைப் பயிற்சியும் சேவைக் காலத்தில் இந்துப் போதகர்கள் சுய தேவைகளைப் பூர்த்தியாக்கும் தகுதியில் வைத்தற் பொருட்டுக் குடிசைக் கைத்தொழிற் பயிற்சியும் வழங்கி இந்துப் போதகர்களை உருவாக்கிச் சைவப் பணிக்கு என நாடெங்கும் உலகெங்கும் அனுப்பிவைக்கும் உன்னத பணியில் இறங்கிச் சைவப் பயிர் பொங்கிச் செழித்து மறுமலர்ச்சி காண வைக்கும் இந் நன் முயற்சியில் கிளிநொச்சிக் குருகுலம் வெற்றிபெற இந்துசாதனம் இதயபூர்வமாகவாழ்த்துகிறது,

---

## சத்து - சித்து - ஆனந்தம்

( 2-ம் பக்கத்து வளர்ச்சி )

களங்களுக்கு உட்படுமாறு அவற்றைச் செய்து வருகிறது. திபேறுடையதாகிய சிவம் நிலைபேறுடையனவாகிய உயிர்களுக்கு. நிலைபேறுடையதாகிய திருவருளைப் புரியவே. மெய்ஞ்ஞானமாகி மிளிர்ந்து கொண்டிருக்கின்றது என்பது உணரத்தக்கதாகும்'

பதி, பசு, பாசங்களாகிய அநாதி நித்தியப் பொருள்கள் மூன்றினுள் பதி எதனையும் அறிவிக்காமலே அறிய வல்லது பசு அறிவித்தால் அறிவது பாசம் அறிவித்தாலும் அறியாதது. அருளும் பதியாகிய சிவபெருமான் வழங்கும் நல்லருளை அவர் செலுத்துகிற அளவுக்குச் சென்று நுகரும் வாய்ப்பு பசுக்களாகிய ஆன்மாக்களுக்கே உண்டு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். பசுவர்க்கத்தினராகிய நம்மவரது நலத்தில் நாட்டங் கொண்டு ஞானப் பெருங்கடலாகத் திகழும் சிவபெருமானது திருவருட் சக்திகளை இச்சை, ஞானம், கிரியை என மூவகைப்படுத்தி அருள் நூல்கள் கூறும். உமாதேவி என்று சொல்லப்பெறும் சிவசக்தி மெய்ஞ்ஞான வடிவமானது. "சக்தி தன்வடிவேதெனில் தடையிலா ஞானமாகும்" என்பது சிவஞான சித்தியார்.

சத்துப்பொருளாகி அழியாது விளங்கும் சிவபெருமான், சித்துப் பொருளாகி அறிவுப் பிழம்பாகவும் விளங்குவதனாலேயே உயிர்களுக்கு வேண்டியனவற்றை அறிந்து உதவி புரிபவராக வீற்றிருக்கின்றார். "நன்றெல்லாம் ஞானசக்தியால் நயந்தறிவன் நாரதன்" என்பது அருணந்தி சிவத்தின் திருவாக்கு. உயிர்களின் உய்திக்குக் கருவியாய் இருந்து உதவுகின்ற சித்துப் பொருளாகிய ஞானசக்தியை உடைமையினால் மட்டும், சிவத்தின் உதவி உயிர்களுக்கு எய்திவிட மாட்டாது, அறிந்து உதவுவனதாகிய சிவம், உதவும் பொருளாகிய இன்பத்தையும் உடையதாய் இருத்தல் வேண்டுமல்லவா? அதனாலேயே அது சத்தும், சித்தும் ஆனந்தமுமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது,

[தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் கும்பாபிஷேக மலரிலிருந்து பெறப்பட்டது]

---

## மகாகும்பாபிஷேகம்

அச்சுவேலி - தம்பாலை வெல்லன் அம்பலவாண சித்தி விநாயகர் கோவில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் 8-7-82 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குருவாக பலாலி 'ஆகம கிரியா திலகம்' சிவாச்சார்யராஜமணி' சிவஸ்ரீ ச. தியாகராஜக் குருக்கள் பணியாற்றுவார்.

---

பயனுறச் சிவதொண்டனின் ஆவுக்குக் காணிக்கையாக வெளியிட்டு வித்துவான் அவர்கள் ஒரு யோகாப்பியாசம் செய்துகாட்டினார் என்று சொல்லுவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பத்திரிகாசிரியத் தொழிலுக்காக வித்திடப்பெற்றது

[வளர்ச்சி 4ஆம் பக்கம்]

உ
சிவமயம்

LANKA - JAFFNA RECEIVED 16-7-?? PERIODICALS LIBRARY * SI...

சைவபரிபாலனசபை - யாழ்ப்பாணம்.

1-11-81ல் நடைபெற்ற சைவசமய பாடப் பரீட்சையில்

## அகில இலங்கைப் பரிசு பெறுபவர் விபரம்

(ஆவணி மாதம் நடைபெறும் சைவமகாநாட்டில் பரிசுகள் வழங்கப் பெறும்)

| | | | |
|---|---|---|---|
| வகுப்பு 12 | செல்வி. நா. நிர்மலாதேவி | யாழ். இந்து மகளிர் கல்லூரி | முதற்பரிசு |
| ,, | செல்வி. ச, அனுசூயா | யாழ் இந்து மகளிர் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. மா. அன்புக்கரசி | யாழ். வட்டு இந்துக் கல்லூரி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 11 | செல்வி. மு. இலலிதாமினி | யாழ். உடும்பிராய். இந்துக். கல்லூரி. | முதற் பரிசு |
| ,, | செல்வன். ம. கமலகாந்தன் | முள்ளியவளை. வித்தியானந்தாக் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. இ. இராசேஸ்வரி | யாழ். பெரியபுலம். மகா வித்தி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 10 | செல்வி. இ. இரஞ்சினி | யாழ். வேம்படி மகளிர் கல்லூரி | தங்கப்பதக்கம் |
| ,, | செல்வன். க. பிரபாகரன் | யாழ். இந்துக் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வன். மு. மணிமாறன் | யாழ். மகாஜனக் கல்லூரி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 9 | செல்வி, செ. நளாயினி | யாழ். காரை. இந்துக் கல்லூரி | தங்கப்பதக்கம் |
| ,, | செல்வி. ம, ஜெயதேவி | யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. செ. மாதினி | யாழ்ப்பாணக் கல்லூரி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 8 | செல்வி. ச. அஜந்தா | யாழ் இந்து மகளிர் கல்லூரி | தங்கப்பதக்கம் |
| ,, | செல்வி. சு. வாசுகி | யாழ். வேம்படி மகளிர் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. சி. ராதை | யாழ். மகாஜனக் கல்லூரி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 7 | செல்வி, ஸ்ரீ. கவிகாயி | யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி | முதற் பரிசு |
| ,, | செல்வி. அ. அருள்விழி | யாழ். இந்து மகளிர் கல்லூரி | இரண்டாம்பரிசு |
| ,, | செல்வி. இ. கௌரி | யாழ். வட்டு. இந்து மகளிர் கல்லூரி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 6 | செல்வி. இ. ராஜி | யாழ். இந்து மகளிர் கல்லூரி | முதலாம் பரிசு |
| ,, | செல்வி. செ. தயாளினி | யாழ். தெல். யூனியன் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. ம. மைதிலி | யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் | மூன்றும் பரிசு |
| வகுப்பு 5 | செல்வன். வி. சண்முகநாதன் | யாழ். சரணவாய் வேதாரணிய பாடசாலை | முதலாம் பரிசு |
| ,, | செல்வி. ஜெ. விஜித்தா | யாழ். புனித செல், மேரிஸ் வித்தி. | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. து. உலோகேஸ்வரி | மா. மாத்தளை பாக்கிய மகா வித்தி | மூன்றும் பரிசு |
| வகுப்பு 4 | செல்வன், ந. பாலகுமார் | யாழ். ஆனை. பெ, மி. த. க, பாடசாலை | முதலாம்பரிசு |
| ,, | செல்வி. க. வனிதா | யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வி. த. ஜானகி | யாழ். திருநெல்வேலி இ. த. க, பாட | மூன்றும் பரிசு |
| வகுப்பு 3 | செல்வன்; கு. சாயிசங்கர் | யாழ். பொன்னாலை வரத. பெரு. வித். | முதலாம் பரிசு |
| ,, | செல்வன், அ. அகிலன் | யாழ். ஞானசரியர் கல்லூரி | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வன். சி. சிவகுமாரன் | யாழ். திருநெல்வேலி றோ. க. த. க, பாட | மூன்றும் பரிசு |
| வகுப்பு 2 | செல்வி. கு. கேதினி | யாழ். இந்து மகளிர் கல்லூரி | முதற் பரிசு |
| ,, | செல்வன், வி. துவாரகேசன் | யாழ். கொக்குவில் இ. ஆ. பாடசாலை | இரண்டாம் பரிசு |
| ,, | செல்வன். செ. ஸ்ரீ கணேசா | யாழ். சுந்தரோடை த. க. பாடசாலை | மூன்றும் பரிசு |

கூடிய தொகையான மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்பிய வகையில் பரிசு பெறும் பாடசாலைகள்

1. யா/வேம்படி மகளிர் கல்லூரி
2. யா/ இந்து மகளிர் கல்லூரி
3. யா/ இந்துக் கல்லூரி

15-6-82

வ. கந்தசாமி
கௌரவ பரீட்சைச் செயலாளர்

Hindu Organ
Fri. 25-6-82, 2, 9-7-82

SRI LANKA RECEIVED 1982 PERIODICALS

# THE HINDU BOARD OF EDUCATION

## Has A History Of Its Own.

## SADAYAR RAJARATNAM

### STOOD FOR IT ALL HIS LIFE TIME

(July 4th h's birth day)

**When the educational history of Jaffna is written in its proper perspective, the part played by the Jaffna Saiva Paripalana Sabhai, its adjunct the Board of Directors of the Jaffna Hindu College, Sir Ponnampalam Ramanathan in his individual capacity, Puthur Malarayar, Tellippalai Thuraiappah, Tellippalai Thuraiappahpillai, Alaveddy Arunasala Udayar, Kandrodai Kandiah, among those memorable establishers of private schools, would certainly be the leading data. The effort of the foreign Missionaries, of course, comes under a different category.**

The Hindu Board of Education was established in 1924 with Sir Ponnampalam Ramanathan as its first President. Almost all of the leading Saiva Leaders of the time, Sir Kanagasabai, Sir W. Duraisamy, S. Sivapadasundarampillai, S. Rajaratnam, Dr. S. Subramaniam, were illustrious among the founding fathers.

The formative period was certainly an uphill task for establishing new schools and obtaining recognition of the Government. But the secretarial work of the Board under the energetic direction of the dynamic Sadayar Rajaratnam was such a reckoning factor that soon the scope of the spade work of the Board began expanding with new schools being established in bunches. The area of activity broadened and the outlying Provinces too became interested in establishing H.B.E. schools. Prof: N. Sinnathamby, the wellknown surgeon, was a great benefactor in this direction

When the Board entered its second decade of existence Sadayar Rajaratnam had become its live wire, President, Secretary, Manager of schools, all offices coming under his direction and supervision. His was not an easy job; The office was no bed of roses Nor could the officer commanding escape becoming envied upon and consequently finding collaborators being at cross purposes.

Just at this time of testing strength there appeared in the arena stalwarts of the calibre of S. R. Kanagganayakam whose strategical moves none could thwart, Pandit S. Kanapathipillai who went heart and soul into the matter of helping the Board survive, S. Adchalingam an inspiring administrator and of course that noblehearted P. S. — Dr. S. Subramaniam — along with Myliddy Swaminathan born fighter and several others.

The Board became a living factor in educational affairs with 152 schools under its command

The name Hindu Board Rajaratnam had then become an endearing term.

## KALIYUGA KULTUR

Holding to ransom innocent people including infants and the invalid, hijacking humans have, in effect, introduced the Kaliyuga Kultur, that the German Kaisers of old, the Stalins of Soviet Russia, Hitler of Nazi notoriety first prescribed and later was clumsily copied by the infamous IdiAmin.

And this ignominious savagery has not failed to enlist shameless admirers who entertain the criminal world with their shouts of Jayawewa.

One glaring example of Criminals negligence that has been exposed by these regularized hijacking exercises is that the airways, the socalled staff of security, the eagle-eyed officers of the Departments of Immigration, Emigration and Customs, have all become guilty of gross negligence in allowing intruding criminals surreptitiously to board Airplanes,

That a mine-infested man should have been let in undetected by every one whose concern is the safety of an aircraft and its passengers is something unthinkable

There seems to be a section of the people of this world who masquerade as revolutionary marauders, taking immense pleasure in seeing other human beings writhe in horrifying agony. If this pernicious trend is allowed to continue then religion would be negatived in the near future.

Religious organizations have a religious duty to discharge. They cannot be heard to say that they are unequal to the impact of evil forces nor can they afford to look askance at these unnerving cruelties exposing their insufficiency to make religious practice have its value and use in this world

We pose a pertinent question and wait for the answer.

What is the remedy that religious organizations can suggest in these circumstances?

Here is a problem for all

## The Jaffna Co-operative Stores Ltd.

420, Hospital Road — Jaffna.

WHEREAS the Legal Heirs of the Estate of late Mr. Vathilingam Sivaguru of Inuvil South, Inuvil, have applied to the directors of the above-named Company for the issue of a Duplicate Certificate in respect of Five (5) Ordinary Shares of Rs. 100/- each, numbered: 2177 to 2181, registered in his name, the original of which is represented to have been destroyed, lost or mislaid; NOTICE IS HEREBY GIVEN THAT if within two weeks hereof no claim is made to or no objection lodged with the undersigned, the Directors will proceed to deal with the application for Duplicate Certificate, the original of which will be deemed to have been cancelled.

420, Hospital Road,
JAFFNA.
18th, June. 1982. (4)

G. SRI MANOHARAN,
Secretary

### மகோற்ஸவம்

வைகாசி மாதம் 12ஆம் நாள் (26-5-82) புதன் கிழமை சுன்னாகம் மயிலணி விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவிலில் துவஜா ரோகணமாகித் தொடர்ந்து பத்து நாட்களுக்கு மஹோற்ஸவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

### இணுவில் முருகன் மகோற்ஸவம்

அருட்சோதி மிக்க முருகன் கோவில்களில் ஒன்றானதும் ஈழத்தின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கொள்ளப்படுவதும் பலபெரியார்களாற் பதிகச் சுவைசொட்டும் பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளதுமான இணுவில் கந்தசுவாமி கோவில் கடந்த வெள்ளிக் கிழமை (28-5-82) கொடியேறித் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. 25 நாட்கள் தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறும் இக்கோவிலில் 8-6-82 இல் மஞ்சத்திருவிழாவும், 12-6-82 இல் மாம்பழத்திருவிழாவும், 19-6-82 இல் கார்த்திகைத் திருவிழாவும் மறுநாள் 20-6-82 இரதோற்ஸவமும் 21-6-82 இல் தீர்த்தோற்ஸவமும் நடைபெற்[illegible]

### நடராஜனின்

[8ஆம் பக்க வளர்ச்சி]

"இந்துசாதனத்தில்" என்றால் வித்துவான் அவர்கள் பண்டிதர் ம. வே. தி. சம்பந்தன் அவர்களுக்குத் துணை ஆசிரியராக இருந்த பணி எடுத்துக் காட்டும். பத்திரிகைப்பணியில் விளங்கப் பல பண்டிதர்களுக்குத் தொடக்கப் பயிற்சி கொடுத்த "இந்துசாதனம்" என்றும் இளமையாய் என்ன இன்றும் இலங்குகின்றது.

சிவதொண்டன் நிலையத்திலே தவப்பணி புரிந்த ஒ ரியோர்களில் அருமையானவர் சில தினங்களுக்கு முன் சிவபதமடைந்த சித்தார்த்தா அவர்கள் சென்ற வழி அனைவருக்கும் துணைப் பலமாக இருந்த வித்துவானும் செல்லவி திரேசர்ந்ததே

### "சிவதொண்டன்"

### க. சி. நடராசன்

கற்றோர் தமைதந்த நல்லகுரு நாதனருள்
சொற்செந் தமிழைச் சுவைசெய்து—சற்சங்கப்
பொற்புச் சிவதொண்டன் போதில் நடராசன்
விற்பனன் வைத்தான் விரித்து.

x x x

விரிபூந் தாது விமன்சைவ வேதத்
தருத்தகைமை யாண்டும் அவனி-பொருந்தவே
வித்வநட ராசன் விரித்த "சிவ தொண்டன்" சீர்
அத்தனெமக் கீந்த அருள்.

x x x

அருளாளர் யோகர் அமைத்தசிவ தொண்டன்
பொருளாகும் சைவசற் போதம்-பெருவாழ்வின்
வண்ண மலரேயாம் வாடாது மாநிலத்தில்
நண்ணும் நடராச னல்.

வானமுகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 430, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 356) on Friday, 2-6-82, 2, 9-7-82.*
Editor-in-Chief:
R. N. Sivaprakasam

